சுற்றுநிருப இல: 93/23

எனது இல: தமொபி/43
தமிழ் மொழிப்பிரிவு,
கல்வி, உயர்கல்வி கலாசார அலுவல்கள்
அமைச்சு,
''இசுருபாய''
பத்தரமுல்ல.

1. மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்களுக்கு,
2. மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு,
3. கோட்ட பிரதேசச் செயலகப் பிரதிக் கல்விப்பணிப்பாளர்களுக்கு.
4. பாடசாலை அதிபர்களுக்கு,

## தமிழ் மொழித் தினம் 1994

அகில இலங்கைத் தமிழ்மொழித் தினவிழா இவ்வாண்டும் விபுலானந்த அடிகளாரின் நினைவுத்தினமான ஜுலை பத்தொன்பதாந் திகதியன்றே நடைபெறவிருக்கிறது. விழா நடைபெறும் இடம்பற்றி உரியவேளையில் தெரிவிக்கப்படும்.

பாடசாலை மட்டம், கோட்டம் அல்லது பிரதேசச் செயலக நிர்வாக மட்டம், மாகாண மட்டம் ஆகிய மட்டங்களில் முதனிலைப் போட்டிகள் நடைபெறும். இறுதி நிலைப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் தேசிய மட்டத்தில் நடைபெறும்.

தமிழ்மொழியினை விரும்பிப் படிக்கும் சிங்கள மாணவர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட விசேட போட்டி இம்முறையும் இடம்பெறுகின்றது. செய்முறை விசேட போட்டிப் பிரிவில் பேச்சுப்போட்டி மாத்திரம் இடம்பெற்றது. இம்முறை தமிழ் உறுப்பு எழுத்துப் போட்டிக்கும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

முஸ்லிம் சமுகத்தின் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் வந்த வேண்டுகோட்கமைய அச்சமூகத்தின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் வண்ணம் முஸ்லிம் நிகழ்ச்சி ஒன்றுக்கும் வேறாக இடமளிக்கப்பட்டிருப்பது இச்சுற்றுநிருபத்தில் இடம் பெற்றுள்ள விசேட அம்சமாகும். முஸ்லிம் நிகழ்ச்சி முஸ்லிம் மாணவர்களுக்காக மாத்திரம் விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாணவர்கள் தாம் கற்கும் மொழியினூடாக பல்வேறு விடய அறிவுரைகளையும் பெற்றுக்கொள்கிறார்கள். எனவே அவர்கள் மொழியினைத் திருத்தமாகவும், உறுப்பாகவும் எழுதும் திறன் பெற்றிருத்தல் எழுதும் திறன் பெற்றிருத்தல் வேண்டுமென்ற கருத்தினை மேன்மைதங்கிய ஜனாதிபதி டீ.பி. விஜயதுங்க அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.
இதற்கிணங்க எல்லாப் பிரிவு மாணவர்களுடைய எழுத்தாக்கங்களிலும் எழுத்துறுப்பு எழுத்துத் திருத்தம் புனிதம் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன. புள்ளி வழங்கலில் இவை குறிப்பாக கவனத்திற் கொள்ளப்படுகின்றன.

பெப்பரவரி 15ந் திகதிக்கு முன்னர் பாடசாலை மட்டத்திலும், மே 15ந் திகதிக்கு முன்னர் கோட்ட/பிரதேச நிர்வாக மட்டத்திலும், ஜுன் 15ந் திகதிக்கு முன்னர் மாகாண மட்டத்திலும் போட்டிகள் நடாத்தி முடிக்கப்பட வேண்டும். மாகாண மட்டத்திலிருந்து ஜுன் 20ந் திகதிக்கு முன்னர் தேசிய நிலைப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கல்வி, உயர்கல்வி. கலாசார அலுவல்கள் அமைச்சின் தமிழ்மொழிப்பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

போட்டிகளில் நடுவர்களாக கடமையாற்றுவதற்கு தகுதி வாய்ந்தவர்களை நியமிப்பதில் அதிகம் அக்கறை காட்டப்படுவதில்லை என்ற குறை கூறப்படுகின்றது. அம்மட்டங்களில் நடைபெறும் போட்டிகளுக்குத் தகுதி வாய்ந்த நடுவர்கள் நியமிக்கப்படுவதற்கான முழுப்பொறுப்பும், அவ்வம் மட்ட அமைப்பாளர்களையே சார்ந்தது. தீர்ப்புக்கள் சம்பந்தமாக எழும் பிரச்சினைகள் யாவும் கூடியளவு அந்தந்த் மட்டங்களிலேயே தீர்க்கப்படல் வேண்டும். மாகாண மட்டத்துக்குள் மேன் முறையீடுகளுக்கு இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் மாகாண இணைப்பதிகாரிகளுக்கே உள்ளது. தேசிய நிலையில் கல்வி அமைச்சின் உரிய அதிகாரிகளே இறுதி முடிவு எடுப்பர்.

1.0 தமிழ்மொழித் தின விழாவின் குறிக்கோள்கள்

- 1.1 மொழி வளர்ச்சி; மனிதப் பண்பாட்டு வளர்ச்சியின் மூலவேர் என்ற உண்மையினை உணர்தல்,
- 1.2 தமிழ் மொழியின் தனித்துவமான பண்புகளையும் சிறந்த விழுமியங்களையும் அறிதல்.
- 1.3 எண்ணங்களையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்தவதற்குத் தமிழ் மொழியினை ஒரு கருவியாகக் கையாளும் திறனைப்பெறுதல்,
- 1.4 தமிழ் மொழி மூலம் பெறப்படும் மொழித்திறன்களும், கலைத்திறன்களும். ஆக்கத்திறன்களும் புகழோடு பொருளையும் தரவல்லது என்ற உண்மையை உணர்தல்
- 1.5 உண்மை, நன்மை, அழகு, ஆகிய தெய்வாம்சங்களை மொழித்திறன், கலைத்திறன் ஊடாக வளர்த்துக்கொள்ளல்.
- 1.6 அகில இலங்கையிலும் வாழ்ந்து வருகின்ற அனைத்துத் தமிழ் பேசும் பிள்ளைகளினதும் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.
- 1.7 ''யாதும் ஊரே யாவரும் கேளீர்'' என்ற பழந்தமிழ்ப் பண்பாட்டினை உணர்ந்து, உலகத்தோடு ஒட்டி வாழும் மனப்பாங்கினை வளர்த்துக்கொள்ளல்.
- 1.8 ஒருவர் ஒருவரோடு இணைந்து வாழ்வதற்கு உதவுவதே மொழியென்ற உண்மையினைத் தாம் உணர்வதும் பிறருக்கு உணர்த்துவதும்.

1.9 சிங்கள மாணவர்களிடம் தமிழ்மொழி கற்பதில் ஏற்பட்டுள்ள [illegible] மேலுந் தூண்டுவதும், இதன் மூலம் வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கு நாட்டம் கொள்ளச் செய்வதும்,

1.10 தமிழ் மொழித்திறன்களை வளர்த்துக் கொள்வதில் புதிய உற்சாகத்துடனும் உத்வேகத்துடனும் ஈடுபடல்,

2.0 போட்டிப் பிரிவுகள்

2.1 முதலாம் பிரிவு - ஆண்டுகள் 4, 5.
2.2 இரண்டாம் பிரிவு - ஆண்டுகள் 6, 7, 8.
2.3 மூன்றாம் பிரிவு - ஆண்டுகள் 9, 10, 11.
2.4 நான்காம் பிரிவு - ஆண்டுகள் 12, 13.
2.5 திறந்த போட்டிப்பிரிவு - ஆண்டுக் கட்டுப்பாடில்லை.
2.6 விசேட போட்டிப்பிரிவு - ஆண்டுகள் 4, 5 (சிங்கள மாணவர்கள்)

திறந்த போட்டிகளிற் பங்குபற்றுவோருக்குப் பிரிவுக் கட்டுப்பாடுகளோ, ஆ[illegible] கட்டுப்பாடுகளோ கிடையா. முஸ்லிம் மாணவர்களுக்கான விசேட நிகழ்ச்சி திறந்த போட்டியிலேயே இடம்பெறுகின்றது.

விசேட போட்டி:-

தமிழ் மொழியை விரும்பிக் கற்கும் சிங்கள மாணவர்களுக்கு மாத்திரம்

குறிப்பு:-

1994 ஆம் ஆண்டில் பாடசாலையில் படித்துக் கொண்டிருக்கும் மாணவ மாணவியர் மாத்திரம் போட்டிகளிற் கலந்து கொள்ளலாம். பாடசாலைப் படிப்பை முடித்துக் கொண்டவர்களுக்கோ, பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கோ போட்டிகளிற் கலந்து கொள்வதற்கு எக்காரணங் கொண்டும் இடமளிக்கக்கூடாது.

3.0 போட்டிக்கான பொது விதிகள்

3.1 குறிப்பிட்ட போட்டியில் குறிப்பிட்ட பிரிவு மாணவர்களே பங்குபற்றுதல் வேண்டும்.

3.2 நிகழ்ச்சியில் இடம்பெறும் கருத்துக்கள் அரசியற் கலப்பு அற்றதாகவும் எவருக்கும் மனத்தாங்கல் எதனையும் ஏற்படுத்தாததாகவும் அமைதல் வேண்டும்.

3.3 நிகழ்ச்சிகளுக்குத் தேவையான பக்கவாத்தியங்கள் வெளியிலிருந்தும் பெறப்படலாம். நிகழ்ச்சியிற் பங்குபற்றுவோர் எண்ணிக்கைக்கு மேலதிகமாகவே பக்கவாத்தியக்காரர் கணிக்கப்படுவார்.

3.4 நிகழ்ச்சியில் இடம்பெறும் பாடல்கள் யாவும் தமிழ்மொழியில் இடம் பெறுதல் வேண்டும்.

3.5 திறந்த போட்டி நீங்கலாக, ஏனைய போட்டிகளில் ஒரு போட்டியாளர் மூன்று போட்டிகளுக்கு மேல் பற்குபற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

3.6 ஒரு பாடசாலை ஆகக்கூடியது பத்து நிகழ்ச்சிகளில் மாத்திரம் பங்குபற்றலாம்.

3.7 பாடசாலை, கோட்டம் அல்லது பிரதேசச் செயலகம், மாகாணம் ஆகிய ஒவ்வொரு முதனிலைப் போட்டியிலும் முதல் இடத்தினைப் பெறும் நிகழ்ச்சிகள் மாத்திரம், முறையே அடுத்த மேனிலைப்போட்டியில் பங்குபற்றுவதற்குத் தகுதி பெறும். அவ்வாறே, மாகாண நிலையில் முதலாம் இடத்தினைப் பெற்ற நிகழ்ச்சிகள் மாத்திரம் தேசிய நிலைப்போட்டியிற் பங்குபற்றுவதற்கு தகுதி பெறும்.

3.8 ஒரு நிலையில் ஏதாவது ஒரு நிகழ்ச்சியில் ஒன்றுக்கு மேற்பட்ட முதலாம் இடங்கள் வர நேருமாயின், அவ்விடங்களைப் பெற்ற அதே நிகழ்ச்சிகள் வேறு நடுவர்களின் முன்னிலையில் மீண்டும் போட்டிக்கு விடப்பட்டு ஒரு முதலாம் இடம் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டு மறுநிலைப்போட்டிக்கு விடப்படுதல் வேண்டும்.

3.9 பாடசாலை நிலை, கோட்ட நிலை அல்லது மாகாண நிலைகளில் போட்டிகள் நடத்தப்பட்டு ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் நிகழ்ச்சிகள் அவ்வவ் நிலைகளில் அறிவிக்கப்பட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன், முடியுமானால் பரிசில்கள் வழங்கப்பட்டும் மாணவர்கள் உற்சாகப்படுத்தப்படல் வேண்டும்.

3.10 தமிழ்மொழி மூலம் கல்வி கற்கும் மாணவர்களைக் கொண்டுள்ள சகல பாடசாலைகளும், தமிழ்மொழிப்பிரிவுகளும் தமிழ் மொழித்தினப்போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கு அவ்வப் பாடசாலை அதிபர்கள், பிரிவுத் தலைவர்கள், கோட்டக் கல்வி அல்லது பிரதேசச் செயலகக் கல்வி அலுவலர்கள் ஆகியோர் அனைத்து ஏற்பாடுகளையும் செய்தல் வேண்டும்.

3.12 முஸ்லிம் நிகழ்ச்சியில் முஸ்லிம் மாணவ மாணவியர் மாத்திரம் பங்குபற்றலாம்.

4.0

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 4.1 | | | |
| 4.2 | | | |
| 4.3 | | | |
| 4.4 | | | |
| 4.5 | | | |
| 4.6 | | | |
| 4.7 | | | |
| 4.8 | | | |
| 4.9 | | | |
| 4.10 | | | |
| 4.11 | | | |
| 4.12 | | | |
| 4.13 | | | |
| 4.14 | | | |
| 4.15 | | | |
| 4.16 | | | |
| 4.17 | | | |
| 4.18 | | | |
| 4.19 | | | |
| 4.18 | | | |

5.0 வாசிப்பு (4.1)

5.1 முதலாம் பிரிவு: ஆண்டுகள் 4,5

5.1.1 விடயம்:

4ஆம் 5ஆம் ஆண்டுக்குரிய ''தமிழ்''ப்பாடநூல்களிலுள்ள மூன்றாம் பாடந் தொடக்கம் ஏழாம் பாடம் வரையுள்ள பாடங்களுள் ஏதாவது ஒரு உரைநடைப் பாடத்தில் நடுவர் குழுவினால் குறித்துக் காட்டப்படும் 12 -15 வரிகள் கொண்ட பகுதியினைப் போட்டியாளர் வாசித்தல் வேண்டும். அவரவர் ஆண்டுக்குரிய பாட நூல்களில் இருந்தே வாசிப்பதற்கான பகுதி செய்யப்படும்.

5.1.2 புள்ளித்திட்டம்:

| | |
|---|---|
| 1. நிலை ...... | 10 |
| 2. தொனி ..... | 20 |
| 3. உச்சரிப்பு ..... | 20 |
| 4. விளக்கம் ..... | 20 |
| 5. பாணி ..... | 20 |
| 6. ஏற்ற வேகம் ..... | 10 |
| | 100 |

5.2 இரண்டாம் பிரிவு: ஆண்டுகள் 6, 7, 8.

5.2.1 விடயம்:

6ம், 7ம், 8ஆம் ஆண்டுக்கான 'தமிழ்' பாடநூல்களில் மூன்றாம் பாடம் தொடக்கம் ஏழாம் பாடம் வரையுள்ள பாடங்களுள், ஏதாவது ஒரு உரைநடைப் பாடத்தில் நடுவர் குழுவினால் குறித்துக் காட்டப்படும் 40 - 45 வரிகள் கொண்ட பகுதியினைப் போட்டியாளர் வாசித்தல் வேண்டும். அவரவர் ஆண்டுக்குரிய பாடநூல்களிலிருந்தே வாசிப்பதற்கான பகுதி தெரிவு செய்யப்படும்.

5.2.2 புள்ளித்திட்டம்:

முதலாம் பிரிவுக்கு வகுத்துக் குறிக்கப்பட்டது போலவே.

6.0 எழுத்து - ஆக்கம் (வசனங்களில்) (4.2)

6.1 முதலாம் பிரிவு : ஆண்டுகள் 4,5

6.2 விடயம்:

நடுவர் குழுவினால் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்து கொடுக்கப்படும். கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்று பற்றிப் பத்துவசனங்கள் எழுதுதல், உறுப்பு, தெளிவு, நிறுத்தற்குறிகள், புனிதம் ஆகியன கவனிக்கப்படும்.

1. மாலைக்காட்சி
2. வீரமாமுனிவர்
3. நன்மாணாக்கர்
4. ஒரு செல்லப்பிராணி
5. தொலைக்காட்சிப் பெட்டி

6.3 நேரம்: 20 நிமிடம்

6.4 புள்ளித்திட்டம்:

| | | |
|---|---|---|
| 1. | தலைப்புக்கேற்ற பொருள் ..... | 35 |
| 2. | கருத்தொழுங்கமைப்பு ..... | 15 |
| 3. | பிழையின்மை ..... | 15 |
| 4. | நிறுத்தற் குறிகள் ..... | 10 |
| 5. | அளவான இடைவெளிகள் ..... | 25 |
| | | 100 |

7.0 கட்டுரை ஆக்கம் (4.3).

7.1 விளக்கக் குறிப்புக்கள்

அ. கட்டுரை ஆக்கம் இரண்டாம், மூன்றாம், நான்காம் பிரிவுகளுக்கு உரியது.

ஆ. மாணவர்களின் சுய ஆக்கத்திறனை ஊக்குவிப்பதே நோக்கமாகும்.

இ. இரண்டாம், மூன்றாம் பிரிவினர்க்கு மாத்திரம் இம்முறையும் விடயப்பரப்புக்கள் நன்நான்கு தரப்பட்டுள்ளன. தரப்பட்ட விடயப்பரப்புக் கொன்றாக நான்கு விடயத் தலைப்புகள் போட்டியின் போதே நடுவர்களால் தரப்படும். நான்கு விடயத்தலைப்புக்களுள் ஒன்றினைப் போட்டியாளர் தெரிவு செய்து எழுதுதல் வேண்டும். முன்னாயத்தத்துக்காக ஐந்து நிமிடங்கள் மாத்திரம் தரப்படும். குறிக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்து கொண்டே முன்னாயத்தம் செய்தல் வேண்டும். போட்டியாளர் எவரொருவருடன் கலந்துரையாடல் தவிர்க்கப்பட்டுள்ளது.

ஈ. நான்காம் பிரிவினர்க்குப் போட்டி நடைபெறும் இடத்தில் நடுவர்களால் நான்கு விடயத்தலைப்புக்கள் மாத்திரம் தரப்படும். போட்டியாளர் விரும்பிய ஒரு தலைப்பினைத் தெரிவு செய்து எழுதுதல் வேண்டும். முன்னாயத்தத்துக்கு பதினைந்து நிமிடங்கள் தரப்படும். குறிக்கப்பட்ட ஆசனங்களில் இருந்தவாறே முன்னாயத்தம் செய்தல் வேண்டும். போட்டியாளர் எவரொருவருடன் கலந்துரையாடல் தவிர்க்கப்பட்டுள்ளது.

உ. பேனாக்களைத் தவிர வேறெதுவும் மண்டபத்துக்குள் கொண்டு வருதல் கூடாது.

ஊ. எழுது தாள்கள் வழங்கப்படும். முன்னாயத்தக் குறிப்புக்களுக்காகவும் எழுதுதாள் தரப்படும்.

7.2 இரண்டாம் பிரிவு: ஆண்டுகள் 6, 7, 8.

7.2.1 விடயப்பரப்புக்கள்:

அ. கல்விக்கு, மொழிக்கு, சமயத்துக்கு, நாட்டுக்குத் தொண்டாற்றிய பெரியார்கள்.

ஆ. இயற்கை அழிவுகள் (வர்ணனை)

இ. மனிதனிடத்திலுள்ள இயற்கைத் திறன்கள்,

ஈ. சீவனோபாயத் தொழில்களும் அவற்றின் மகத்துவங்களும்,

7.2.2 சொற்கள்: 175 - 200.

7.2.3 நேரம் முன்னாயத்தத்துக்குமாக 35 நிமிடங்கள் மாத்திரம்

7.2.4 புள்ளித்திட்டம்:

| | |
|---|---|
| 1. தலைப்பும் பொருளும் ..... | 25 |
| 2. அமைப்பும் நேர்த்தியும் ..... | 20 |
| 3. மொழிக்கையாட்சி ..... | 15 |
| 4. கூறுந்திறனும் தெளிவும் ..... | 20 |
| 5. உறுப்பு ..... | 20 |
| | 100 |

7.3 மூன்றாம் பிரிவு: ஆண்டுகள் 9, 10, 11.

7.3.1 விடயப்பரப்புக்கள்.

அ. தீமை விளைவிக்கும் போதைப் பொருட்கள்

ஆ. பாடசாலைக் கல்வியால் பெறக்கூடிய சிறந்த அனுபவங்கள்.

இ. சூழல் பாதிப்பும் (காரணங்கள், காரணிகள்) பாதுகாப்பும்.

ஈ. எமது நாட்டு அபிவிருத்திக்குத் தடையாக இருக்கும் முக்கிய பிரச்சினைகளும் அவற்றுக்கான திர்வுகளும்.

7.3.2 சொற்கள்: 275 - 300

7.3.3 நேரம்: முன்னாயத்தத்துக்குமாக 50 நிமிடங்கள் மாத்திரம்

7.3.4 புள்ளித்திட்டம்:

| | |
|---|---|
| 1. தலைப்பும் பொருளும் ..... | 25 |
| 2. அமைப்பும் நேர்த்தியும் ..... | 20 |
| 3. மொழிக்கையாட்சி ..... | 15 |
| 4. கூறுந்திறனும் தெளிவும் ..... | 20 |
| 5. உறுப்பு ..... | 20 |
| | 100 |

7.4 நான்காம் பிரிவு: ஆண்டுகள் 12,13.

7.4.1 விடயம்: நடுவர் குழுவினால் தரப்படும் நான்கு தலைப்புக்களுள் ஒன்று

7.4.2 சொற்கள்: 300 - 350

7.4.3 நேரம்: முன்னாயத்தம் 15 நிமிடம்

கட்டுரை எழுதுதல்: 45 நிமிடம்

7.4.4 புள்ளித்திட்டம்:

| | |
|---|---|
| அ. தலைப்பும் பொருளும் ..... | 25 |
| ஆ. அமைப்பும் நேர்த்தியும் ..... | 25 |
| இ. மொழிக்கையாட்சி ..... | 25 |
| ஈ. ஆக்கமும் அளிப்பும் ..... | 25 |
| | 100 |

8.0 கவிதை (4.4)

8.1 சிறப்பு விதிகள்

8.1.1 மேற்படி போட்டியில் மூன்றாம் நான்காம் பிரிவினர் மாத்திரம் கலந்து கொள்ளலாம்.

8.1.2 மாணவர்களின் அனுபவம், உணர்ச்சி, கற்பனை, வர்ணனை, இரசனை ஆகியவற்றின் வெளிப்பாடுகளாகக் கவிதை அமைதல் வேண்டும்.

8.1.3 விடயத்திற்குரிய தலைப்புக்கள் போட்டி நடைபெறும் இடத்திலேயே தரப்படும். நான்கு தலைப்புக்கள் தரப்படும். போட்டியாளர் ஒரு தலைப்பில் கவிதையை எழுதுதல் வேண்டும்.

8.1.4 முன்னாயத்தத்துக்கு 30 நிமிடங்கள் தரப்படும். குறிக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்திருந்தே முன்னாயத்தம் செய்தல் வேண்டும். கலந்துரையாடல் தவிர்க்கப்பட்டுள்ளது.

8.1.5 யாப்பு மரபு கவனிக்கப்பட மாட்டாது.

8.1.6 ஆக்கங்கள் எவ்விதத்திலும் எவர் மனதையும் புண்படுத்தாததாகவும் அரசியற் கலப்பற்றதாகவும் அமைதல் வேண்டும்.

8.2 மூன்றாம் பிரிவு: ஆண்டுகள் 9, 10, 11.

8.2.1 விடயம்: நடுவர்களால் தரப்படும் நான்கு தலைப்புக்களுள் ஒன்று.

8.2.2 சொற்கள்: 120 - 125

8.2.3 நேரம்: முன்னாயத்தம்:30 நிமிடம்
கவிதையாக்கம்: 45 நிமிடம்

8.2.4 புள்ளித்திட்டம்

| | |
|---|---|
| 1. பொருட்செறிவு ..... | 20 |
| 2. படிமமும் வடிவமும் ..... | 20 |
| 3. உணர்ச்சி வெளிப்பாடு ..... | 20 |
| 4. கற்பனை, வர்ணனை ..... | 20 |
| 5. ஆக்கத்திறன் ..... | 20 |
| | 100 |

8.3 நான்காம் பிரிவு: ஆண்டுகள் 12, 13 .

8.3.1 விடயம் : நடுவர்களால் தரப்படும் நான்கு தலைப்புக்களில் ஒன்று.

8.3.2 சொற்கள்: 190 - 200

8.3.3 நேரம்: முன்னாயத்தம் 30 நிமிடம்
கவிதையாக்கம் 1 மணித்தியாலம்

8.3.4 புள்ளித்திட்டம்: மூன்றாம் பிரிவுக்கு வகுத்துக் குறித்தது போலவே.

9.0 சிறுகதை ( 4.5 )

9.1 சிறப்பு விதிகள்:

9.1.1 மேற்படி போட்டி மூன்றாம், நான்காம் பிரிவினர்க்குரியது.

9.1.2 சிறுகதை ஒரு சம்பவத்தை அல்லது ஒரு நிகழ்ச்சியை வைத்துப் பின்னப்பட்டதாக அமைதல் வேண்டும். கலைத்துவமும் செழுமையும் நிறைந்த சொல்வளம் உடையதாகவும் அமைதல் வேண்டும்.

9.1.3 சிறுகதையின் இலக்கணக்கூறுகள் எதிர்பார்க்கப்பட மாட்டாதென்றும் சிறுகதை ஆக்கத்தில் ஊக்கமும் முனைப்பும் கவனத்திற் கொள்ளப்படும்.

9.1.4 நடுவர்களால் தீர்மானித்தளிக்கப்படும் கதைக்கருக்கள் (உரிப்பொருட்கள்0 நான்கில் போட்டியாளர் ஒன்றைத்தெரிந்து கருப்பொருளுக்கேற்ற கதைத் தலைப்பினையும் தாங்களே இட்டுக் கதையினை ஆக்குதல் வேண்டும்.

9.1.5 தீர்மானிக்கப்படும் ஒவ்வொரு கதைக்கரு பற்றியும் நடுவர்களால் சிறு விளக்கம் அளிக்கப்படும்.

9.1.7 எவரொருவருடனும் எத்தகைய கலந்துரையாடலும் செய்யாது முன்னாயத்தஞ் செய்தல் வேண்டும்.

9.2 மூன்றாம் பிரிவு: ஆண்டுகள் 9, 10, 11.

9.2.1 விடயம்: நடுவர்களால் தரப்படும் கதைக்கருக்கள் நான்கினுள் ஒரு கதைத் தலைப்பு

9.2.2 சொற்கள்: 275 - 300

9.2.3 நேரம்: முன்னாயத்தத்துக்குமாக 1 மணி 30 நிமிடம்.

9.2.4 புள்ளித்திட்டம் :

| | | |
|---|---|---|
| 1. | தலைப்பும் கதையும் ..... | 20 |
| 2. | அனுபவமும் கற்பனையும் ..... | 20 |
| 3. | அமைப்பும் வடிவமும் ..... | 20 |
| 4. | நிகழ்ச்சியும் கதைப்பின்னலும் ..... | 20 |
| 5. | மொழியாட்சி ..... | 20 |
| | | 100 |

9.3 நான்காம் பிரிவு: ஆண்டுகள் 12, 13.

(1) விடயம் (2) சொற்கள் (3) நேரம் (4) புள்ளித்திட்டம் ஆகியவை மூன்றாம் பிரிவினர்க்குக் குறிக்கப்பட்டவை போலயோகும். ஆனால் இரு பிரிவினர்க்கும் போட்டிகள் தனித்தனியாகவே நடைபெறும்.

10.0 பேச்சு (4.6)

விளக்கம்:

அ. முதலாம் பிரிவினர் மனனஞ்செய்யப்பட்ட விடயத்தைப் பேசுவார்கள்.

ஆ. இரண்டாம் பிரிவினர் குறிக்கப்பட்டுள்ள நான்கு விடயத்தலைப்புகளுள் அடங்கியதாக நடுவர்களால் கொடுக்கப்படும் நான்கு விடயத்தலைப்புக்களுள் ஒன்றினை மாத்திரம் தெரிந்து பேசுதல் வேண்டும்.

இ. மூன்றாம், நான்காம் பிரிவினர்க்கு போட்டி நடைபெறும் இடத்திலேயே நன்நான்க தலைப்புக்கள் நடுவர்களால் தரப்படும். போட்டியாளர் விரும்பிய ஒரு தலைப்பினை மாத்திரம் தெரிந்து பேசுதல் வேண்டும்.

ஈ. இரண்டாம், மூன்றாம், நான்காம் பிரிவினர் திருவுளச்சீட்டு குலுக்கப்பட்டுப் போட்டியாளர்களால் எடுக்கப்படும். இலக்க ஒழுங்கின் படியே பேசுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

உ. தலைப்புகள் தரப்பட்டு, முன்னாயத்தத்துக்காக 20 நிமிட நேரம் விடப்படும்.

ஊ. தலைப்புக்கள் தரப்பட்ட நேரத்திலிருந்து போட்டி முடியும் நேரம் வரை போட்டியாளர் எவருடனும் கலந்துரையாடுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார். எவரொருவராவது இவ்விதியை மீறியதாக ஊர்ஜிதம் செய்யப்பட்டால் அமைப்பாளர்களால் உடனடியாகப் போட்டியிலிருந்து நீக்கப்படுவார்.

10.1 முதலாம் பிரிவு : ஆண்டுகள் 4 ,5.

10.1.1 விடயம்:

100 சொற்களுக்குட்பட்டதாய்ப் பினவரும் தலைப்புக்களின் கிழ்வரும் ஆக்கம் ஒன்றினை மனனஞ்செய்து பேசுதல்.

அ. பெற்றோரைப் பேணல்,

ஆ. நிலாக்காட்சி,

இ. ஊக்கமுடைமை

ஈ. அடக்கமும் பணிவும்,

10.1.2 நேரம்: 5 நிமிடம்

10.1.3 புள்ளித்திட்டம்:

1. நிலை ..... 20
2. அவை அஞ்சாமை ..... 20
3. உச்சரிப்பும் தொனியும் .... 20
4. வெளிப்படுந்திறன் ..... 20
5. மெய்ப்பாடு ..... 20

100

10.2 இரண்டாம் பிரிவு: ஆண்டுகள் 6, 7, 8.

10.2.1 விடயப்பரப்புக்கள்:

1. சிறந்த அறநூல்கள்
2. நமது நல்வாழ்வுக்கு உதவுவோர்
3. சிறந்த நற்பண்புகள்
4. பயனுள்ள பொழுது போக்குகள்.

10.2.2 நேரம்: 7 நிமிடம்

10.2.3 புள்ளித்திட்டம்:

1. நிலை ..... 25
2. பேச்சுவன்மை ..... 25
3. மெய்ப்பாடு ..... 25
4. பேசும் பாவி ..... 25

100

10.3 மூன்றாம் பிரிவு: ஆண்டுகள் 9, 10, 11.

10.3.1 விடயம்: நடுவர் குழுவினால் தரப்பட்ட நான்கு தலைப்புக்களுள் ஒன்று பற்றிப் பேசுதல்.

10.3.2 நேரம்: 7 நிமிடம்

10.3.3 புள்ளித்திட்டம்:

1. பொருட்செறிவு ..... 25
2. பேச்சு வன்மை ... 25
3. மெய்ப்பாடு ..... 25
4. பேசும் பாவி ..... 25

100

10.4 நான்காம் பிரிவு: ஆண்டுகள் 12, 13.

10.4.1 விடயம்: நடுவர் குழுவினால் தரபபட்ட நான்கு தலைப்புக்களுள் ஒன்றுபற்றிப் பேசுதல்.

10.4.2 நேரம்: 7 நிமிடம்.

10.4.3 புள்ளித்திட்டம்: மூன்றாம் பிரிவினர்க்கு வகுத்துக் குறித்தது போலவே

11.0 பா ஓதுதல் (4.7).

விளக்கம்:

கவிதைகள் கீழே தரப்பட்டுள்ளன. நேர அளவு இல்லை. முதலில் பொருள் விளங்கப் பாடலைப் பிரித்துப்படித்தல் வேண்டும். பின்னர் இசையுடன் ஓதல் வேண்டும். இது தனி நிகழ்ச்சியாகவே அமையும். தேவையெனின் சுருதிப்பெட்டி மாத்திரம் பயன்படுத்தலாம். வேறு பக்க வாத்தியங்கள் எதுவும் பயன்படுத்த முடியாது.

11.1 முதலாம் பிரிவு: ஆண்டுகள் 4,5.

11.1.1 விடயம்: பின்வரும் பாடற்றொகுதிகளிலிருந்து ஒன்றினைத் தெரிவு செய்க.

தொகுதி 1

தூய்மை

தூய்மை சேரடா தம்பி! - என்
சொல்லை நீ பெரிதும் நம்பித்
தூய்மை சேரடா தம்பி!

வாய்மையாலும் ஒழுக்கத்தாலும் - அகத்
தூய்மை உண்டாகும் மேலும் மேலும்
தூய்மை சேரடா தம்பி!

உடையினில் தூய்மை - உண்ணும்
உணவினில் தூய்மை - வாழ்வின்
நடையினில் தூய்மை - உன்றன்
நல்லுடல் தூய்மை - சேர்ப்பின்
தடையில்லை, வாழ்நாள் ஒவ்வொன்றும் இன்பம்
தரும்நாள் ஆகும் நீ என்றும்
தூய்மை சேரடா தம்பி

துகளிலா நெஞ்சில் - சாதி
துளிர்ப்பதும் இல்லை - சமயப்
புகைச்சலும் இல்லை - மற்றும்
புன்செயல் இல்லை - தம்பி
அகத்திலே அன்பின் வெள்ளம் மூழ்கும், தீய
அச்சம் போகும், நீ எந்நாளும்
தூய்மை சேரடா தம்பி

- பாரதிதாசன்

## தொகுதி 11

### பசு

பச்சைப்புல்லைத் தின்று வெள்ளைப்
பால் தர என்ன
பக்குவம் செய்வாய்? அதனைப்
பகருவாயோ? பசுவே !

உச்சியுடன் நக்கி, ஈன்ற
உடலுனது கன்றை,
உயிரெழுப்பும் மாயம் ஏதோ?
உரைத்திடுவாய், பசுவே

வாய்க்கினிய பால் தருவாய்:
வயற்குர மும்தருவாய்:
வண்டி கட்டக் காளையும்நீ
வளர்த்தளிப்பாய், பசுவே!

தாயில்லாப் பிள்ளைகட்குத்
தாயாவாய், நோயால்
தளர்பவர்க்கு மருத்துவச்சி
தானாவாய், பசுவே

11.1.2 புள்ளித்திட்டம்:

1. பொருள் விளங்கிச் சந்தி பிரித்துப் படித்தல் ..... 30
2. இசையோடு ஓதுதல் ............................................ 35
3. தெளிவும் விளக்கமும் ......................................... 20
4. நிலை ...................................................................... 15

100

11.2 இரண்டாம் பிரிவு: ஆண்டுகள் 6, 7, 8

11.2.1 விடயம்: பின்வரும் பாடற்றொகுதிகளிலிருந்து ஒன்றினைத் தெரிவு செய்க.

தொகுதி 1

<u>கடவுள் பக்தி</u>

''அல்லா வென்பார் சிலபேர்கள்:
அரன்அரி யென்பார் சிலபேர்கள்
வல்லான் அவன்பர மண்டலத்தில்
வாழும் தந்தை யென்பார்கள்:
சொல்லால் விளங்கா 'நிர்வாணம்'
என்றும் சிலபேர் சொல்வார்கள்:
எல்லா மிப்படி பலபேசும்
ஏதோ ஒருபொருள் இருக்கிறது''

''கோயில்களின் பெரும்பயனைக் குறைத்துப்பேசி:
கும்பிடுவோர் நம்புவதைக் குலைத்துமேயித்
தூயவழி வாழ்வதற்கு நல்லோர் கண்ட
துறவுமனப் பொறையறிவை துவேசஞ்சொல்லி:
வாயில்வந்த கொச்சைகளால் வசைகள் வீசி,
வகுப்புக்களில் வெறுப்புக்களே வளரச்செய்யும்,
ஞாயமற்ற பேச்சுக்களை நீக்காவிட்டால்
நம்முடைய தமிழ்வாழ்வு நாசமாகும்''

-நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

தொகுதி 11

<u>கலிகாலக் கொடுமை.</u>

தாய்புத்தி சொன்னால் மறுத்திடும் காலமுயர்
தந்தையைச் சீறுகாலம்
சற்குருவை நிந்தைசெய் காலமெய்க் கடவுளைச்
சற்றுமென் னாதகாலம்.

பேய்தெய்வ மென்றுப சரித்திடும் காலமிது
புரட்டருக் கேற்றகாலம்
பெண்டாட்டி வையினும் கேட்கின்ற காலநற்
பெரியோர்சொல் கேளாத காலம்.

தேய்வுடன் பெரியவன் சிறுமையிது காலமிது
சிறியவன் பெருகுகாலம்:
செருவில்லிட் டோடினோர் வரிசைபெறு காலவசை
செப்புவோர்க் குதவுகாலம்.

வாய்மதம் பேசிவிடும் அநியாய காரர்க்கு
வாய்த்தகலி காலமையா:
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

- குருபாத தாசர்

11.2.2 புள்ளித்திட்டம்: முதலாம் பிரிவுக்கு வகுத்துக் குறித்ததுபோலவே

11.3 மூன்றாம் பிரிவு: ஆண்டுகள் 9, 10, 11.

11.3.1 விடயம்: பினவரும் பாடத்தொகுதிகளுள் ஒன்றினைத் தெரிவு செய்க.

தொகுதி 1

<u>மாலை வர்ணனை</u>

பார்: சுடர்ப்பரிதியை சூழவே படர் முகில்
எத்தனை தீப்பட் டெரிவன? ஓகோ!
என்னடி! இந்த வன்னத் தியல்புகள் -
எத்தனை வடிவம்! எத்தனைக் கலவை!
தீயின் குழம்புகள்! -செழும்பொன் காய்ச்சி
விட்ட ஓடைகள்! -வெம்மை தோன்றாமே
எரிந்திடுங் தங்கத் தீவுகள்! பாரடி!
நீலப்பொய்கைகள்! -அடடா, நீல
வண்ண மொன்றில் எத்தனை வகையடி!
எத்தனை செம்மை! பசுமையுங் கருமையும்,
எத்தனை! -கரிய பெரும்பெரும் பூதம்!
நீலப் பொய்கையின் மிதந்திடுந் தங்கத்
தோலிகள் சுடரொளிப் பொற்கரை யிட்ட
கருஞ்சிக ரங்கள்! கானடி, ஆங்கு
தங்கத்திமிங்கிலம் தாம்பல மிதக்கும்
இருட்கடல்! ஆஹா! எங்கு நோக்கிடினும்
ஒளித்திரள்! ஒளித்திரள்! வண்ணக்களஞ்சியம்!

- சுப்பிரமணிய பாரதியார்.

தொகுதி 11

## முகய்யிதீன் ஆண்டவன் பிள்ளைத் தமிழ்

தேனும் கனியும் முப்பழமும்
திரட்டுப் பாலும் சர்க்கரையும்
தெள்ளி வடித்த தெள்ளமுதும்
திருவாய் கசப்ப மறுத்தோடும்
பாலும் மதியும் ஒவ்வாத
பனிமா ளிகைவிட் டெழுந்தருளி
பசும்பா சடைத்தீந் தெரியழற்பைங்
காட்டில் சருகுன் டினித்துமனம்

தானும் தனிமைத் துணையாக்கித்
தனியாய்ப் பொருந்தா கம்படைத்து
சயனம் ஒழித்துக் கண்முடிச்
சடத்தை மறந்து வெகுகாலம்
கானம் புகுந்து தவஞ்செய்த
களிறே தாலோ! தாலேலோ!
கருணைக் கடலே செய்யிபதுல்
காதிர் தாலோ! தாலேலோ
- ஜவ்வாதுப் புலவர்.

11.3.2 புள்ளித்திட்டம்:

1. பொருள் விளங்கி சந்து பிரித்துப் படித்தல்.......... 25
2. மெய்ப்பாட்டுணர்ச்சி ................................................20
3. இசையோடு ஓதுதல் ............................................ 25
4. தெளிவும் விளக்கமும் .......................................... 20
5. நிலை .....................................................................10

100

11.4 நான்காம் பிரிவு: ஆண்டுகள் 12, 13

11.4.1 விடயம்: பின்வரும் பாடற்றொகுதிகளினுள் ஒன்றினைத் தெரிவு செய்க.

தொகுதி 1

குறிஞ்சிக்கனி

''சுடர்த் தொடிஇ! கேளாய்-தெருவில் நாம்ஆடும்
மணற்சிற்றில் காலிற்சிதையா, அடைச்சிய
கோதைபரிந்து, வரிப்பந்து கொண்டோடி,
நோதக்க செய்யும் சிறுபட்டி, மேலோர் நாள்,
அன்னையும் யாதும் இருந்தோமா, 'இல்லீரே!'
உண்ணு நீர் கேட்டேன்' என வந்தாற்கு, அன்னை
'அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடர் இழாய்!
உண்ணு நீர் ஊட்டிவா' என்றாள், எனயானும்
தன்னையறியாது சென்றேன். மற்று என்னை,
வளை முன்கைபற்றி நலியத் தெருமந்திட்டு,
'அன்னாய்! இன்னொருவன் செய்தன காண்! என்றேனா!
அன்னை அலறிப் படர்ந்தரந் தன்னை யான்
'உண்ணுநீர் விக்கினான்' என்றனா, அன்னையும்
தன்னைப் புறப்பழித்து நீவ, மற்றுஎன்னைக்
கடைக்கண்ணால் கொல்வான் போல் நோக்கி நகைக்கூட்டம்
செய்தான் அக்கள்வன் மகன்!''

- கலித்தொகை

தொகுதி 111

<u>விடுதலைக் காதல்</u>

காதலிலே விடுதலை என்றாங்கோர் கொள்கை
        கடுகி வளர்ந் திடுமென்பார் யூரோப்பாவில்:
மாதரெல்லாம் தம்முடைய விருப்பின் வண்ணம்
        மனிதருடன் வாழ்ந்திடலாம் என்பார் அன்னோர்.

பேதமின்றி மிருகங்கள் கலத்தல் போலே
        பிரியம் வந்தால் கலந்து, அன்பு பிரிந்து விட்டால்,
வேதனையொன்றில்லாதே பிரிந்து சென்று
        வேறொருவன் தனைக்கூட வேண்டும் என்பார்.

வீரமிலா மனிதர்சொலும் வார்த்தை கண்டீர்!
        விடுதலையாம் காதலெனில் பொய்மைக் காதல்
சோரரைப்போல் ஆண்மக்கள் புவியின் மீது
        சுவைமிக்க பெண்மைநலம் உண்ணுகின்றார்.

காரணந்தான் யாதெனிலோ ஆண்களெல்லாம்
        காவின்பம் விரும்புகின்றார் கற்போமேலென்று
ஈரமின்றி யெப்போதும் உபதேசங்கள்
        எடுத்தெடுத்துப் பெண்களிடம் இயம்புவாரே
                - மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

11.4.2 புள்ளித்திட்டம்: மூன்றாம் பிரிவுக்கு வகுத்துக் குறித்தது போலவே.

12.0 இசை வாய்ப்பாட்டு - அபிநயம் தனி (4, 8)

12.1 முதலாம் பிரிவு: ஆண்டுகள் 4, 5.

12.1.1 நேரம்: 4 - 5 நிமிடங்கள்.

12.1.2 விடயம்: கீழே தரப்பட்டுள்ள பாடற் தொகுதிகளுள் ஒன்றினை தெரிவு செய்க.

தொகுதி 1

<u>தந்தை பெண்ணுக்கு</u>

தலைவாரிப் பூச்சூடி உன்னைப் - பாட
சாலைக்குப் போவென்று சொன்னாள் உன் அன்னை (தலை)

சிலைபோல ஏனிங்கு நின்றாய்? - நீ
சிந்தாத கண்ணீரை ஏன்சிந்து கின்றாய்?
விலைபோட்டு வாங்கவா முடியும்? - கல்வி
வேளைதோ றுங்கற்று வருவதால் படியும்.
மலைவாழை யல்லவோ கல்வி! - நீ
வாயார உண்ணுவாய் போஎன் புதல்வி (தலை)

படியாத பெண்ணா யிருந்தால் - கேலி
பண்ணுவார் என்னையிவ் வூரார் தெரிந்தால்
கடிகாரம் ஓடுமுன் ஓடு! என்
கண்ணல்ல, அண்டைவீட் டுப்பெண்களோடு
கடிதாய் இருக்குமிப் போது - கல்வி
கற்றிடக் கற்றிடக் தெரியுமப் போது
கடல் சூழ்ந்த இத்தமிழ்நாடு - பெண்
கல்விப்பெண் கல்வியென் கின்றதன் போடு! (தலை)

- பாரதிதாசன்

தொகுதி 11

வசந்தம்

மின்னி மேகம் பரவுது,
        மெல்ல மெல்லத் துளிக்குது:
என்ன சொல்லித் துளிக்குதென்று
        இயம்பு கின்றேன் கேளம்மா!

''மண்ணில் கொஞ்ச நாட்களாய்
மறைந்துறங்கும் செடிகளே!
கண்ம லர்ந்து வாருங்கள்:
காலை யாச்சு'' தென்குது.

''பட்டு டுத்து வாருங்கள்:
பனிகள் பூண்டு வாருங்கள்:
பொட்ட ணிந்து சீக்கிரம்
புறப்ப டுங்கள்'' என்குது

''வாசச் செப்பை திறவுங்கள்:
வாரி யெங்கும் வீசுங்கள்:
ஈசன் பாத பூசனைக்கு
எழுந்திருங்கள்'' என்குது

''வாட்ட மெல்லாம் நீங்கவே
வசந்த காலம் வந்தது:
மீட்டும் நன்மை காணலாம்
விரைந்தெ ழுங்கள்'' என்குது.

- கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை.

12.1.3 புள்ளித்திட்டம்:

1. பாடுந்திறன் .................................. 20
2. சுருதி, லயம் ............................... 20
3. உச்சரிப்புத் தெளிவு ................... 10
4. அபிநயம் ..................................... 20
5. புத்தளிப்புக் கருவிப் பாவனை..... 20
6. மெய்ப்பாட்டுணர்ச்சி .................... 10

100

13.0 இசைவாய்ப்பாட்டு - அபிநயம் குழு (4, 9)

13.1 முதலாம் பிரிவு: ஆண்டுகள் 4, 5.

13.1.1 நேரம்: 5 - 6 நிமிடங்கள்

13.1.2 விடயம்: கீழ்வரும் தலைப்புகளுள் ஒன்றின்மீது ஆக்கஞ்செய்யப்பட்ட பாடல்.

1. மீனவர் பாடல்.
2. நெல் குற்றும் பாடல்.
3. மழைப்பாடல்

13.1.3 புள்ளித் திட்டம்: 12.1.3 இல் வகுத்துக் குறிப்பிடப்பட்டது போலவே.

குறிப்பு: இசை வாய்ப்பாட்டு அபிநயப்பாடல் - தனி குழு.

1. அங்க அசைவுகளோடு அபிநய மூலம் கருத்து வெளிப்பாடு அமைதல் வேண்டும். ஆனால் அங்க அசைவுகள் நாட்டியப் பாங்காக அமையக் கூடாது.

2. பின்னனி இசைக்குச் சுருதிப்பெட்டியுடன் புத்தளிப்புக் கருவி தவிர வேறு வாத்தியங்கள் இருக்கக் கூடாது.

3. புத்தளிப்புக் கருவிகள் புதிதாக ஆக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். மரபு ரீதியான சங்கீத உருப்படிகளோடு தொடர்புடையதான இசைக்கருவிகள், தாளக்கருவிகள் புத்தளிப்புக் கருவிகளாகா.

14.0 இசை - தனி (4,10)

14.1 இரண்டாம் பிரிவு: ஆண்டுகள் 6, 7, 8.

14.1.1. நேரம்: 4 - 6 நிமிடங்கள்.

14.1.3 வெண்பா கட்டாயம். அத்துடன் பின்வரும் பாடற்றொகுதிகளுள் ஒன்றினைத் தெரிவு செய்து இசைத்துப்பாடுதல்.

<u>வெண்பா - நல்வழி</u>

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைக்கும்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் - கூடுவிட்டிங்(கு)
ஆவிதான் போனபின்பு யாரே அனுபவிப்பார்
பாவிகாள் இந்தப் பணம்?

தொகுதி 1

நடிப்புச் சுதேசிகள்

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி
வஞ்சனை சொல்வா ரடீ - கிளியே!
வாய்ச் சொல்லில் வீரரடி!

கூட்டத்திற் கூடிநின்று கூவிப்பி தற்றலன்றி
நாட்டத்திற் கொள்ளாரடீ! - கிளியே!
நாளில்ம றப்பா ரடீ!

சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும்
சிந்தை இரங்காரடீ! - கிளியே
செம்மை மறந்தா ரடீ!

அச்சமும் பேடிமையும் அடிமைச்சி றுமதியும்
உச்சத்திற் கொண்டா ரடீ! கிளியே
ஊமைச்ச னங்க ளடீ!

ஊக்கமும் உள்வலியும் உண்மையின் பற்றுமில்லா
மாக்களுக் கோர் கணமும் - கிளியே!
வாழத் தகுதி உண்டோ?
- மகாகவி சுப்பிரமணியபாரதியார்

தொகுதி 11

<u>நல்லினஞ் சேர்தல்</u>

சோதிடம் அறிந்துசேர் ஏந்நாளும் - மைந்தா
தீயரை அணுகிடிற் பழி மூழும்!
சீரிய ஒழுக்கம்
சிறந்த நூற் பழக்கம்
ஆரிடம் உள்ளதோ அனைவரிடமே - நேயம்
ஆகுதல் அல்லவோடா உன் கடமை!

மண்ணின்குணம் அங்குள்ள நீருக்குண்டு - மைந்தா
மாலையில் மலர்மணம் நாருக்குண்டு
திண்ணம் பன்றியொடும்
சேர்ந்த கன்றும் கெடும்!
கண்செய்த குற்றம் தீயர் தமைக்காண்டல் - மைந்தா
கைசெய்த குற்றம் நலம்நல்லார் அடி தீண்டல்!

சடுதியிலே தீயர் சகவாசம் - பிராண
சங்கடம் உணர் இந்த உபதேசம்!
தடையிதில் ஏது?
நீயெனக் கோது
சுடுநெருப் பானவரின் குணம்தெரிந்து - மைந்தா
சுப்ரத்தினம் சொல்லும் அமுதருந்து

- பாரதிதாசன்.

14.1.3. புள்ளித்திட்டம்:

| | |
|---|---|
| 1. பாடுந்திறன் .................. | 30 |
| 2. சுருதி ........................... | 25 |
| 3. லயம் ........................... | 25 |
| 4. உச்சரிப்புத் தெளிவு ... | 20 |
| | 100 |

14.2 மூன்றாம் பிரிவு: ஆண்டுகள் 9, 10, 11.

14.2.1 நேரம்: 8 - 10 நிமிடங்கள்.

14.2.2 விடயம்: 1. கீழே தரப்பட்டுள்ள பாடலை விருத்தமாக பாடுதல்
2. கர்நாடக இசை உருப்படி ஒன்று.

பாடல் ( விருத்தத்தில் )

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கனிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்:
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.
மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

14.2.3 புள்ளித்திட்டம்:

1. பாடுந்திறன்.......................... 30
2. சுருதி ................................25
3. லயம் ................................25
4. உச்சரிப்புத் தெளிவு .........20
100

14.3 நான்காம் பிரிவு: ஆண்டுகள் 12, 13.

14.3.1. நேரம்: 10 - 12 நிமிடங்கள்.

14.3.2 விடயம்: கர்நாடக இசை உருப்படி ஒன்றில் இராக ஆலாபனை செய்து பாடி, பொருத்தமான இடத்தில் நிரவல் செய்து கற்பனாஸ்வரம் பாடுதல்.

14.3.3 புள்ளித்திட்டம்:

1. பாடுந்திறன் ........................20
2. சுருதி ..................................30
3. இராக ஆலாபனை.............15
4. சுரம் பாடுதல் .................... 15
5. உச்சரிப்புத் தெளிவு.......... 20

15.0 இசை - குழு (4, 11)

15.1 இரண்டாம் பிரிவு: ஆண்டுகள் 6, 7, 8.

15.1.1 நேரம்: 6 - 10 நிமிடங்கள்.

15.1.2 விடயம்: கீழ்வரும் விடயப்பரப்புக்குள் ஒரு புதிய ஆக்கப்பாடல். அபிநயம் அனுமதிக்கப்பட மாட்டாது.

1. போதைகளும் வாதைகளும்.
2. கணனியுகத்தில் நாம்.
3. வேற்றுமையால் விளையும் தீமைகள்.

15.1.3 புள்ளித்திட்டம்:

1. புதிய ஆக்கம் ..................25
2. பாடுந்திறன் ........................25
3. சுருதி .................................15
4. லயம் ...............................15
5. ஒத்திசைவு .........................20

100

15.2 மூன்றாம் பிரிவு: ஆண்டுகள் 9, 10, 11.

15.2.1 நேரம்: 8 - 10 நிமிடங்கள்.

15.2.2 விடயம்: கர்நாடக இசைத்தமிழ் உருப்படி ஒன்று

15.2.3 புள்ளித்திட்டம்:

1. பாடுந்திறன் .................... 20
2. சுருதி ............................ 20
3. லயம் ............................ 20
4. உச்சரிப்புத் தெளிவு ...... 20
5. ஒத்திசைவு ..................... 20

100

15.3 நான்காம் பிரிவு: ஆண்டுகள் 12, 13.

15.3.1 நேரம்: 8 - 10 நிமிடங்கள்

15.3.2 விடயம்: இராக மாளிகை கீர்த்தனை

15.3.3 புள்ளித் திட்டம்:

1. பாடுந்திறன் ........................30
2. சுருதி ................................ 15
3. லயம் ................................ 15
4. உச்சரிப்புத் தெளிவு .........20
5. ஒத்திசைவு .........................20

குறிப்பு: இசை - தனி: சுருதிப் பெட்டி அல்லது தம்புராவுடன் மாத்திரம் பாடுதல் வேண்டும்

இசை - குழு: சுருதி வாத்தியத்துடன் தாள வாத்தியக்கருவி ஒன்றும், அதனுடன் துளைக்கருவி ஒன்று அல்லது நரம்புக் கருவி ஒன்று மாத்திரம் பயன்படுத்துதல் வேண்டும்

16.0 நடனம்: தனி (4, 12)

16.1 முதலாம் பிரிவு: ஆண்டுகள் 4, 5.

16.1.1 நேரம்: 5 நிமிடம்.

16.1.2 விடயம்: மேற்படி ஆண்டுகட்குரிய பிள்ளைகளுக்குப் பொருத்தமான பாடல்களைத் தெரிவு செய்து, அவற்றிற் கேற்ப நடனம் அமைத்தல்

16.1.3 புள்ளித்திட்டம்:

1. பாவம் ................................25
2. தாளம், லயம் .................. 25
3. அங்கசுத்தம் ...................... 25
4. சமர்ப்பணம், ஒப்பனை ..... 25

100

16.2 இரண்டாம் பிரிவு: ஆண்டுகள் 6, 7, 8.

16.2.1 நேரம்: 8 நிமிடங்கள்

16.2.2 விடயம்: விரும்பிய கீர்த்தனை அல்லது பதத்துக்கு நடனம் ஆடுதல்.

16.2.3 புள்ளித்திட்டம்: 16.1.3 இல் குறிக்கப்பட்டுள்ளது போல

16.3 மூன்றாம் பிரிவு: ஆண்டுகள் 9, 10, 11

16.3.1 நேரம்: 10 நிமிடங்கள்

16.3.2 விடயம்: பரதம்: சப்தம்

16.3.3 புள்ளித்திட்டம்:

1. பாவம் ....................30
2. தாளம், லயம் .......30
3. அங்கசுத்தம் .........30
4. சமர்ப்பணம் ......... 10

16.4 நான்காம் பிரிவு: ஆண்டுகள் 12,13.

16.4.1 நேரம்: 12 - 15 நிமிடங்கள்.

16.4.2 விடயம்: சுலோகத்துடன் தில்லானா.

16.4.3 புள்ளித்திட்டம்:

1. பாவம் ................................30
2. தாளம், லயம் ................... 20
3. அங்கசுத்தம் .....................25
4. ஆக்கத்திறன் ....................10
5. சமர்ப்பணம், ஒப்பனை .... 15

100

17.0 நடனம் - குழு (4.13)

17.1 முதலாம் பிரிவு: ஆண்டுகள் 4, 5.

17.1.1 நேரம்: 5 நிமிடங்கள்.

17.1.2 விடயம்: பின்வருவனவற்றுள் ஒரு நடனவகையைத் தெரிவு செய்க.

1. வானவில் நடனம்
2. பொம்மை நடனம்
3. தாள நடனம் (தாளக்கருவிகள் றபான், கஞ்சிரா, சல்லாரி போன்றவை)

17.1.3 புள்ளித்திட்டம்:

1. பாவம் ..........................................20
2. தாளம், லயம் ..............................20
3. அங்கசுத்தம் ................................20
4. ஒத்திசைவு ..................................20
5. சமர்ப்பணம், உடையலங்காரம் ...20

17.2 இரண்டாம் பிரிவு: ஆண்டுகள் 6, 7, 8.

17.2.1 நேரம்: 7 நிமிடங்கள்.

17.2.2 விடயம்: பின்வருவனவற்றுள் ஒரு நடன வகையைத் தெரிவு செய்க

1. மயில் நடனம்.
2. கோலாட்டம்.
3. கரகாட்டம்.

17.2.3 புள்ளித்திட்டம்: 17.1.3 இல் குறிக்கப்பட்டது போலவே.

17.3 மூன்றாம் பிரிவு: ஆண்டுகள் 9, 10, 11.

17.3.1 நேரம்: 7 - 10 நிமிடங்கள்

17.3.2 விடயம்: பினவருவனவற்றுள் ஒரு நடன வகையைத் தெரிவு செய்க

1. வாள் நடனம்
2. பந்து நடனம்
3. தீப நடனம்

17.3.3 புள்ளித்திட்டம்:

1 பாவம் ..........................................15
2. தாளம், லயம் ..............................20
3. அங்கசுத்தம் ................................20
4. ஆக்கத்திறன் ................................15
5. ஒத்திசைவு ..................................15
6. சமர்ப்பணம், உடையலங்காரம் ... 15

100

17.4 நான்காம் பிரிவு: ஆண்டுகள் 12,13

17.4.1 நேரம்: 12 நிமிடங்கள்.

17.4.2 விடயம்: மிஸ்ர அலாரிப்பும் கீர்த்தனையும்

17.4.3 புள்ளித்திட்டம்: 17.3.3 இல் குறித்துள்ளது போல.

நடனம்: <u>கவனிக்க வேண்டிய அம்சங்கள்.</u>

1. தாளத்துக்கு ஆடுதல்.
2. கூட்டாக இயங்குதல்.
3. பின்னணியுடன் ஒத்திசைதல்.
4. மெய்ப்பாட்டுணர்ச்சி புலப்படுத்துதல்.
5. உடை, ஒப்பனைப் பொருத்தம்.
6. பதிவு, நாடா பாவிக்காதிருத்தல்,
7. நட்டுவாங்கம் செய்யும் தாளம், மிருதங்கம் என்பவற்றுடன் துளைக்கருவி அல்லது நரம்புக்கருவி ஒன்று மாத்திரம் உபயோகித்தல்,
8. நேரக்கட்டுப்பாடு.

18.0 திறந்த போட்டி

18.1 நாடகங்கள்.

<u>கடைபிடிக்கப்பட வேண்டிய அம்சங்கள்:</u>

1. தலைப்புக்கேற்ற கதையம்சங்களும், கலையம்சங்களும் கொண்டிருத்தல்.
2. பொருத்தமான உத்திகள் கையாளப்படல்.
3. பின்னணிக் குரல் வேண்டியவிடத்து அதுவும் போட்டியாளர்களுடையதாகவே இருக்கும்.
4. பக்கவாத்திய உதவி மாத்திரம் வெளியாரிடமிருந்தும் பெறப்படல்.
5. அரசியற் கலப்போ, யாருக்காவது மனத்தாங்கல் உண்டு பண்ணும் அம்சங்களோ இடம் பெறாதிருத்தல்
6. எந்த வகையிலும் பதிவு நாடாக்கள் பாவியாதிருத்தல்.
7. ஆட்கட்டுப்பாடு, நேரக்கட்டுப்பாடு கண்டிப்பாக கடைப்பிடித்தல்.
8. சினிமாப்பாடல்களோ, மெட்டுகளோ இடம் பெறாதிருத்தல்.

18.1.1 புராண - இலக்கிய நாடகம் (4.14)

18.1.1.1 விடயம்: புராண இலக்கிய கதைகளிலிருந்து எடுக்கப்படும் நிகழ்ச்சிகள்

18.1.1.2 நேரம்: மேடையலங்காரத்திற்குட்பட 35 நிமிடங்கள் மாத்திரம்

18.1.1.3 புள்ளித்திட்டம்:

1. தலைப்புக்கேற்ற நாடகப் பிரதியாக்கம்.....15
2. நடிப்பு ..........................................................20
3. மேடையமைப்பு ...........................................15
4. உடையலங்காரம், ஒப்பனை ...................... 20
5. புராண / இலக்கிய உணர்வு .................. 15
6. நெறியாள்கை............................................ 15

100

18.1.2 நாட்டிய நாடகம்: (4.15).

18.1.2.1 விடயம் புராண, இலக்கியக் கதைகளிலிருந்து எடுக்கப்படும் நிகழ்ச்சிகளைத் தொனிப்பொருளாகக் கொண்டிருத்தல்

18.1.2.3 புள்ளித்திட்டம்

1. நாடகப் பிரதியாக்கம் .......10
2. நாட்டியமுறைமை .............20
3. மெய்ப்பாட்டுணர்வு ............20
4. இசை அமைவு ..................15
5. ஒப்பனை ........................... 15
6. நெறியாள்கை .................. 20

100

குறிப்பு: நாட்டிய நாடகத்தில் கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள்.

1. கதையம்சம் ஆடற்பாங்கினால் புலப்படுத்தப்படல்.
2. சாஸ்திரிய நாட்டியப் பண்புகளைக் கொண்டிருத்தல்.
3. பொருத்தமான ஆடை அணிகலன்களும் ஒப்பனைகளும்.
4. நேரக்கட்டுப்பாடு.

18.2 விவாதம் உரை தழுவியது. (4.16)

18.2.1 விடயம்: நடுவர் குழுவினால் தரப்படும் தலைப்பு ஒன்றினை ஒட்டியும் 'வெட்டியும்' பேசுதல்.

18.2.2 நேரம்: 30 நிமிடங்கள்.

18.2.3 புள்ளித்திட்டம்:

1. பொருள் ............................ 20
2. பேச்சு வன்மை ..................20
3. சமயோசித தன்மை ..........25
4. விவாதத்திறன் ................... 25
5. குழுவொருமைப்பாடு ........ 10

100

விவாதம்: கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்கள்.

1. நடுவர் குழுவினால் தரப்படும் தலைப்புக்குட்பட்டே விவாதம் அமைதல் வேண்டும்.
2. ஒரு குழுவுக்கு மூவர் மட்டுமே கலந்து கொள்வர்.
3. சமயம், மொழி, இனம் அரசியல் சம்பந்தமானவை விவாதத்தலைப்புக்குள் அடக்கப்படக் கூடாது.

18.3 வில்லுப்பாட்டு, இசை தழுவிய உரை. (4.17)

18.3.1 நேரம்: 15 நிமிடங்கள்.

18.3.2 புள்ளித்திட்டம்:

1. பொருள் 25
2. சொல்லுந்திறன் 25
3. இசைப்பண்பு 20
4. ஒத்திசைவு 20
5. நகைச்சுவைப் பாங்கு 10

100

வில்லுப்பாட்டு: கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள்

1. இசை இடையிட்ட உரைச்சித்திரமாக அமைதல் வேண்டும்.
2. சினிமா மெட்டுக்கள், பாணிகள் தவிர்க்கப்படல் வேண்டும்.
3. பண்பற்ற சொற்கள் சொற்றொடர்கள் பாவிக்கப்படக் கூடாது.

18.4 முஸ்லிம் மாணவர்களுக்கான விசேட நிகழ்ச்சி.

18.4.1 விடயம்: பா ஓதல் அல்லது நாட்டுப்பாடல் பாடுதல் ( தனி நிகழ்ச்சி)

18.4.2 நேரம்: 5 நிமிடங்கள் முதல் 7 நிமிடங்கள் மாத்திரம்.

18.4.3 புள்ளித்திட்டம்:

1. உச்சரிப்பு .............25
2. அமைப்பு ...............25
3. வெளிப்பாடு........... 15
4. உடை ஆசாரம் ... 10
5. கருத்துச் செறிவு ..15
6. தொனி ..................10

100

குறிப்புக்கள்:

1. இது தனி நிகழ்ச்சியாகவே அமையும்.
2. பா ஓதல்: முபாறக் மாலை, றசூல் மாலை, மீரான் மாலை, பெண்புத்தி மாலை, தலைப்பாத்திஹா, ஆசாரக்கோவை ஆகிய விடயப்பரப்புகளுள் ஒன்றினைத் தெரிவு தெரிந்து, விடயத்தலைப்பு ஒன்றினை இட்டு மனனஞ் செய்து பாடுதல்.
3. நாட்டுப்பாடல்: இஸ்லாமியக் கருத்துக்களைக் கொண்ட நாட்டுப்பாடல்களிலிருந்து விருப்பத்திற்குரிய பகுதிகளைத் தெரிவு செய்து பாடுதல்.
4. அறபுத் தமிழ் சரியான உச்சரிப்பு கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.
5. நேரக்கட்டுப்பாடு கண்டிப்பானது.

ழ்ச்சி)

ாலை,
ஆகிய
த்தலைப்பு
ட
ந் தெரிவு
க்

19.0 சிங்கள மாணவர்களுக்கான தமிழ்ப் பேச்சு (4.19)

19.1 விசேட பிரிவு: ஆண்டுகள் 4, 5.

19.2 நேரம்: 5 நிமிடங்கள்

19.3 புள்ளித்திட்டம்:

1. நிலை ................................ 20
2. உச்சரிப்பு .......................... 20
3. விளக்கம் ........................... 20
4. மெய்ப்பாடு ........................ 20
5. சபைக்கூச்சமின்மை ........... 20

100

19.1 சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்து (4.20)

19.1.1 விடயம்: கிளியைப் பற்றி ஒவ்வொன்றும் மும்மூன்று சொற்களுக்கு மேற்படாத ஐந்து வசனங்களை நடுவர் உச்சரித்து சொல்ல, கவனமாகக் கேட்டுப் போட்டியாளர்கள் உறுப்பாக எழுதுதல் வேண்டும்.

19.1.2 விசேட பிரிவு: ஆண்டுகள் 4,5.

19.1.3 நேரம்: 20 நிமிடங்கள்.

19.1.4 புள்ளித்திட்டம்:

1. பொருள் விளக்கம் ....................... 20
2. எழுத்துக்களை இனங்காணல் ..... 20
3. உறுப்பாக எழுதுதல் .................... 30
4. நிறுத்தக்குறிகள் இடல் ............. 15
5. பொருத்தமான இடைவெளிகள் ... 15

100

## தமிழ்த் தினப் போட்டி மாதிரி விண்ணப்பப்படிவம்

நிலை: பாடசாலை / கோட்டம் அல்லது பிரதேச செயலகம் / மாகாணம்:

பெயர்: ______________________________

விலாசம்: ______________________________

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| 4.1 | | 1 | | | | |
| | | 2 | | | | |
| 4.2 | | 1 | | | | |
| 4.3 | | 2 | | | | |
| | | 3 | | | | |
| | | 4 | | | | |
| 4.4 | | 3 | | | | |
| | | 4 | | | | |
| 4.5 | | 3 | | | | |
| | | 4 | | | | |
| 4.6 | | 1 | | | | |
| | | 2 | | | | |
| | | 3 | | | | |
| | | 4 | | | | |
| 4.7 | | 1 | | | | |
| | | 2 | | | | |
| | | 3 | | | | |
| | | 4 | | | | |
| 4.8 | | 1 | | | | |
| 4.9 | | 1 | | | | |
| 4.10 | | 2 | | | | |
| | | 3 | | | | |
| | | 4 | | | | |
| 4.11 | | 2 | | | | |
| | | 3 | | | | |
| | | 4 | | | | |
| 4.12 | | 1 | | | | |
| | | 2 | | | | |
| | | 3 | | | | |
| | | 4 | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1.11 | | \| | | | | |
| | | \| | | | | |
| | | \| | | | | |
| | | \| | | | | |
| 1.11 | | | | | | |
| 1.11 | | | | | | |
| 1.11 | | | | | | |
| 1.11 | | | | | | |
| 1.11 | | | | | | |
| 1.11 | | | | | | |
| 1.11 | | | | | | |

மேற் கூறப்பட்ட விபரங்கள் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.

ஒப்பம் : ..............................................................

பெயர் : ..............................................................

திகதி : ..............................................................

அதிபர் / பிரதேச செயலகம் அல்லது கோட்டத்துப் பி.க.ப. / மாகாணக் க. ப.

குறிப்புக்கள்:

1. மேற்படி மாதிரி விண்ணப்பப் படிவத்தினை பிரதிபண்ணி ஒவ்வொரு நிலைப் போட்டிக்கும் இவ்விரு படிவங்கள் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
2. பங்கு பற்றும் நிகழ்ச்சிக்குரிய கூட்டுக்குள் '✓' அடையாளமிட்டு நிகழ்ச்சித் தெரிவுகளை அத்தாட்சிப்படுத்தவும்.
3. ஒவ்வொரு பிரிவிலும் கலந்து கொள்ளும் ஒவ்வொரு போட்டியாளரின் பெயரும் முதலெழுத்தும் தமிழில் மாத்திரம் எழுதப்பட்டு, அவரின் பெயருக்கு நேரே அவரது கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும். (1) விடய இலக்கம், (2) விடயம். (3) பிரிவு, (4) பங்கு பற்றுபவர் பெயர், (5) ஒப்பம் என்ற பகுதிகளில் மாதிரிப்படிவம் ஒன்று தயாரிக்கப்பட்டு, இதிலும் இரட்டைப் பிரதிகள் விண்ணப்பங்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். குழுவினருக்கும் இவ்வாறு தாயாரித்து விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.
4. போட்டியாளர் ஒவ்வொருவரும் தத்தமது அடையாளத்தை நிருபிக்கும் வகையில்-
   (அ) தேசிய அடையாள அட்டையை அல்லது,
   (ஆ) தபால் அடையாள அட்டையை அல்லது,
   (இ) பாடசாலை அதிபர், கோட்டத்துப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆகிய இருவராலும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட போட்டியாளரின் புகைப்படப் பிரதியை ஒவ்வொரு மேனிலைப் போட்டியிலும் சமர்ப்பித்தல் வேண்டும்

5. ------- மாதம் ----- திகதிக்கு முன்னர் தேசிய மட்டப் போட்டியாளரின் விபரங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அனுப்பி வைக்கப்படும் முகவரி கல்விப் பணிப்பாளர், தமிழ் மொழிப் பிரிவு, கல்வி, உயர்கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு, ''இசுருபாய'' பத்தரமுல்ல.

ஆர்.ஐ.ரி.அலஸ்
கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளரும்,
கல்வி, உயர் கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளரும்,
கல்வி, உயர்கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சு,
''இசுருபாய''
பத்தரமுல்ல.

கல்வி, உயர்கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சின்
சுற்றுநிருப இலக்கம்:

எனது இல: விவ/72
விவசாயக் கிளை,
கல்வி, உயர்கல்வி, கலாசார
அலுவல்கள் அமைச்சு
''இசுருபாய'', பத்தரமுல்லை.

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டங்களுக்குப் பொறுப்பான பி.க. பணிப்பாளர்களுக்கும், அதிபர்களுக்கும்,

------ ஆம் ஆண்டுக்குரிய பாடசாலை விவசாயக்கல்வி,
வேலைத்திட்டம்

1. கல்வி, உயர்கல்வி அமைச்சின் 1992/16 ஆம் இலக்கமும் 1993/13 ஆம் இலக்கமும் கொண்ட சுற்று நிருபங்களுக்கு மேலதிகமாக, பாடசாலைகளில் 1994 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட வேண்டிய விவசாய, சுற்றாடற் கல்வி வேலைத்திட்டங்களைக் கீழ்க்காணும் வகையில் சமர்பிக்கின்றேன். அந்தந்தப் பிரதேசங்களின் காலநிலைத் தன்மைகளுக்கும், தேவைகளுக்கும் ஏற்ப பயிர் செய்யும் காலம் மற்றும் போட்டிகளை ஒழுங்கு செய்ய வேண்டிய காலப்பகுதி என்பனவற்றை மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

2. ஒவ்வொரு பாடசாலைத் தோட்டமும் மண்ணரிப்பினால் பாதுகாக்கப்படும் வண்ணம், நன்கு திட்டமிடப்பட்ட நில அலங்காரத்திற்கும் பயன்படுத்தலுக்குமான வேலைத்திட்டமொன்றின் அடிப்படையில், பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும். இதில் விவசாய ஆசிரியர்களும் விவசாயப் பாடத்தினைப் பயிலுகின்ற மாணவர்களும் மாத்திரமின்றி பாடசாலையிலுள்ள சகல ஆசிரியர்களும் மாணவர்களும் பங்குபற்றுதல் வேண்டும். இதற்கென வாரத்தில் இரண்டு பாடவேளைகளைத் தேவைக்கேற்ற விதத்தில் ஒதுக்கிக் கொள்ளலாம். பாடசாலை விவசாய நடவடிக்கைகள், மேற்குறித்த 1993/13 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்திற்கமையத் தாபிக்கப்பட்ட பாடசாலை இளம் விவசாயிகளை கழகங்கள் மூலமாகவும் செயற்படுத்தலாம். பாடசாலை மாணவர்களிடையே செய்முறை நடவடிக்கைகளிலான ஆர்வத்தைத் தூண்டுவதற்காக விவசாயம், வீட்டுத்தோட்டச் செய்கை போன்ற பாடங்கள் தொடர்பாகப் பாடசாலையில் நடத்தப்படுகின்ற பரீட்சைகளின் போது செய்முறைப் பகுதிக்கு 50% புள்ளிகளை வழங்குவதையும் விதந்துரைக்கலாம்.

3. விவசாயத் திணைக்களத்தினால் விதந்துரைக்கப்பட்டுள்ள புதிய பயிர்வகைகளைப் பாடசாலைத் தோட்டத்தில் வளர்த்து அவற்றைச் சமுதாயத்தினரிடையே பரவலாக்குவதற்கான வேலைத்திட்டமொன்றினையும் ஆரம்பிக்கலாம். இத்திட்டத்தின் அடிப்படையில் பாடசாலை விவசாய வள நிலையங்கள் வாயிலாக ஏற்கனவே புதிய இன வற்றாளைக் கிழங்கு வகைகள் சமுதாயத்தினரிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. பாடசாலைத் தோட்டத்தில் சாதாரண பயிர்களைப் பயிரிடுவதற்கு மேலதிகமாக வளங்கள் உள்ள பாடசாலைகளைப் பொறுத்த வரையில் விசேட செயற்றிட்டங்களையும் ஆரம்பிக்க

முடியும். ஏற்கனவே அநேகமான பாடசாலைகளில் சேதனவுறுப்புப் பசளை உற்பத்தி. காளான் பயிர் செய்கை, கிழங்குப் பயிர் உற்பத்தி, சாடி நாற்றுக்களினதும் மேடை நாற்றுக்களினதும் உற்பத்தி, தேன் வளர்ப்பு, காய்கறிச் செய்கை, மலர்ச் செய்கை, அலங்காரத் தாவர உற்பத்தி போன்ற செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் மேல்மாகாணப் பாடசாலைகளில் மிளகாய்ச் செய்கைச் செயற்திட்டமும், தென்மாகாணப் பாடசாலைகளில் ஏற்றுமதிக்கான பயிர்களை உற்பத்தி செய்யும் செயற்றிட்டமும், மத்திய மாகாணத்தில் காளான் செய்கை பண்ணும் செயற்றிட்டமும், ஊவா மாகாணத்தில் பலகைக்கான மரக்கன்றுகளின் உற்பத்தியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

4. பாடசாலைத் தோட்ட செய்கையின் போது இயன்றளவு கூட்டுப் பசளை, பண்ணைப்பசளை. பச்சிலைப்பசளை போன்ற சேதனவுறுப்புப் பசளைகள் பயன்படுத்தப்பட வேண்டியதுடன் ஒவ்வாத விவசாய இரசாயனப் பொருள்கள் பயன்படுத்தப்படுவது குறைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும். இம்முறைகளைச் சமுதாயத்தினரிடையே பரவச் செய்தல் வேண்டும்

05. விவசாயக்கல்வி நாட்காட்டி -

6. மேற்குறிப்பிட்ட வேலைத்திட்டத்தை சித்திபெறச் செய்வதற்காக விவசாய அபிவிருத்தி அதிகாரசபை பல்வேறு விதமான உத்திகளைச் செய்யும். மேலும், இந்த வேலைத்திட்டத்தினை சித்திபெறச் செய்வதற்காக பாடசாலை அபிவிருத்திச் சபைகளின் ஒத்தாசையும் முழுமையாகப் பெறப்படுதல் வேண்டும். விவசாயத்துடன் தொடர்புடைய அதிகாரிகள், ஆசிரியர்கள் மாத்திரமின்றி மாகாணக் கல்விப் பணிப்பாளர், கோட்டத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகிய கல்வித்துறையிலுள்ள சகலரும் விவசாயத்தில் ஊக்கம் உடையவராய் இருத்தல் வேண்டும்.

7. மேற்படி வேலைத்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையொன்றினை திரு.யூ.எம். அபயவர்த்தன. கல்விப் பணிப்பாளர் (விவசாயம்) அவர்களுக்கு முன்னுள்ளபடி விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

8. மேற்குறித்த வேலைத்திட்டத்தினை சித்திபெறச் செய்வது கௌரவ கல்வி, உயர்கல்வி, கலாசார அலுவல்கள், சுதேச வைத்தியத்துறை அமைச்சரவர்களின் அபிலாசையாதலால் இதற்காகக் கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள அனைவரினதும் ஒத்தழைப்பினனை நாடுகிறேன் என்பதை தயவாய் அறியத்தருகிறேன்.

என். வீ. கே. கே. வேரகொட,
செயலாளர்,
கல்வி, உயர்கல்வி, கலாசார அலுவல்கள்
அமைச்சு.

பிரதிகள்:

1. செயலாளர், விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சித்துறை அமைச்சு - தகவலுக்காக
2. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம் - தகவலுக்காக
3. தலைவர், விவசாய அபிவிருத்தி அதிகார சபை - தகவலுக்காக
4. தலைவர், மத்திய சுற்றாடல் அதிகார சபை - தகவலுக்காக
5. வனப்பாதுகாவலர், வனவளப்பாதுகாப்புத் திணைக்களம் - தகவலுக்காக
6. பணிப்பாளர் - கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களம்
7. பிரதிக்கல்விப் பணிபாளர்கள் / உதவி க.ப (வி.வ) ஏற்ற நடவடிக்கைகளுக்காக.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப் பெற்றது